
# கொரோனாக் கவிதைகள்!

## 1. கொரோனா?!

ஒளியைப் போலே வேகமாய் போகுது.
தானாய் வந்து சத்தமின்றிச்சேருது!
வீணாய்ப் போன மீடியாக்கள்
நூற்றுக் கணக்கில்,
கதையைத் தானே சொல்லுது!
அய்யோ பாவம் மக்களுந்தான்
குழம்பிப் போயி நிக்குது!
கொஞ்சிப்பேசும் குழந்தைகளும்
தூரமாகிப் போகுது!
சாதியில்லே! மதமுமில்லே!
யாவும் சமத்துவமாய் ஆச்சுது!
ஓடிப் போவாய் **குரோனா** என்று உள்ளந்தானே
பதைக்குது!

**கவிவளவன்** (23-03-2020)



## 2. கொரோனாவே போ!

வாழ்க்கைப் போச்சு!வழக்குப் போச்சு!
எல்லாமே இங்கு கெட்டுப்போச்சுதே!
குரோனா வந்து எல்லாத்தையும் தள்ளி வைத்து,
தள்ளித் தள்ளி போக வைத்தது!
பக்கத்து வீட்டுமாமா கூட பேச முடியலே!
எதிர்த்த வீட்டுப் பையனையும் காணமுடியலே!
காலிருந்தும் வெளியே நடக்க முடியலே!
ஓட்டிப் போக பைக் இருந்தும்
ரோட்டிலேதான், போகமுடியலயே!
என்னைக்குத் தான் இந்த நிலைமை மாறிப் போகுமோ!
எதுக்குத் தான் இப்படி எல்லாம் ஆகிப் போகுதோ!
**குரோனா குரோனா** இங்கேயிருந்து
எப்பதான் நீ போவாயோ!
சொல்லு சொல்லு சீக்கிரமா
நீயே தானா தொலைஞ்சிப் போய்விடு !
-**கவிவளவன்** **30-03-2020**

## 3. எங்கே தேடுவோம்?

கீழை வானில் காலைச் சுடரொளி!
மழைதேடும் வெம்மை!
கூவிடும் புள்ளினங்கள்!
கரையும் காகம்!
ஒலியெழுப்பும் ஆவின் கன்று!
காற்றும் அசைந்து முகம் வருடிற்று!


இனம் புரியாத இறுக்கம்!
சாலைகள் வெறிச்சோடின!
மூடிய சன்னல்களுக்குப் பின்னால்,
சில முகங்கள் எதையோத் தேடின!
அடுக்களையில் பிறக்கும் உணவு;
நாசிகளில் குறுகுறுப்பு இல்லை!

தொலைத்த ஒன்றைத்
தொலைக்காத இடத்தில் தேடுகிறோம்!
அது எது? அமைதியும் அன்பும்
இயந்திரக் கதியாய் இயங்கிய பின்னே,
தேடுதல் வேட்டை தொடரும் வரையில்,
எங்கே கிடைக்கும் அன்பும் அமைதியும்?

உருத்தெரியாத கிருமியொன்று,
உருவங்களைக் கட்டிப் போட்டது!
வீட்டுக்குள்ளேயே பழங்கதைகளும்,
பல்லாங்குழியுமாய், பிள்ளைகளோடு!
நல்லனத் தேடி நல்லன செய்வோம்!
யாவரும் சமமென இறுதியாய் நம்புவோம்!

**கவிவளவன்** **(09-04-2020)**7 AM


## 4. மயக்கம்!



சோர்ந்த விழிகள்,
பசியின் மயக்கத்தில்;
காமிராப் பதிவுகளில்,
ஏற்க மறுத்தச் சுயம்!

கொள்ளை நோயைத்
தாண்டியக் கொடூரம்,
வயிற்றில் சுரக்கும் அமிலம்!
இரண்டுக்கும் முடிவு
ஒன்றேதான்!

## 5. வேய்ந்த கோலங்கள்!



கடகட வெனவாய்ச் சத்தம் இசைத்து,
படபடவெனவாய் வேலைகள் செய்து,
தடதட வெனவாய் ஓடி ஆடி,
மடமட வெனவாய் யாவையும் தேடி,

குடுகுடு வென்றே சிந்தை செய்து,
திடுதிடு வென்றே எங்கும் ஓடி,
திகுதிகு வென்று அனைத்தும் தேடி,
சுறுசுறு வென்றே திரிந்த மாந்தர்,

பரபர வென்றே பரவும் கிருமியால்,
விடுவிடு என்ற வேதனை அடைந்து,
திருதிரு வென்று வீட்டில் முடங்கி,
அட அட என்று அழுகின்றாரே!

**கவிவளவன்** **(25-04-2020)** (1.10 பி.எம்.)

## 10 இறைநிகர் கொரோனா!

எங்கும் நிறைந்ததாய்; யாவரின் எண்ணமும்,
தங்குத் தடையின்றி பூச்சிக் **கொரோனா**
தங்கி நிறைதலால், வல்லோன் இறையோடு,
மங்காப் புகழ்பெறக் காண்!
**கவிவளவன்**02-07-2020 (10-45 AM)

## 9 . யார்தான் அறிவீரோ!

கார்முகிலும் போர்முகிலாய்த்தான்
 திரண்டுவந்தே பொழியும் மழை!
தேர் எழுந்து வீதியில்தான் வரவே
 திரளுமந்த மக்களுந்தான்;
சீர்கொள்ளாச் சோதரியாய்ச் சிக்கி
 சத்தமின்றி அடைபட்டு வாழ்ந்திடவும்,
யாரவரோ ஏன்செய்தார் எரிதழலாய்க்
 கொல்லும் **கொரோனா** பூச்சிதன்னை!

மார்தட்டித் தானென்று வாழ்ந்த மனிதன்,
 மறைந்திருந்தே வாழுகின்றான் அய்யோ!
வேர்பிடித்தச் சிறுமையினைக் வெல்வதற்கே,
 வந்ததுவோ பூச்சியெனும் பேரழிவே!
யார் அறிவார் அது இறையவனோ?
 இயற்கையெனும் பெருநிதியோ!
சீர்கெட்டு அலைகின்றார் யாவருந்தான்;
 சிந்தித்து செயல் படுவீர் மானிடர்தாமே!

**கவிவளவன் 30-06-2020 (06.10 AM)**

## 6. இற்றைநாள்!


காலையெழும் பரிதியிலே
கனிவில்லை!
மாலைவரும் நறுங்காற்றும்
சுகமில்லை!
பாலையிலே நீர்ச்சுனைப் போல்
வாழ்வே!
ஆலையிட்ட கரும்பெனவாய்
நினைவே!
சூலைநோய்க் கொரானா
அழிவதென்றோ?
-கவிவளவன் (13-04-2020) 11.20 AM

## 7 நுண்கிருமி!

ஆடிய மனிதன்,
கூட்டுக்குள் அடங்க,
கிரீச் சிட்டன புள்ளினங்கள்!
விலங்குகள்,
முழுமையான சுதந்திரத்துடன்!
கவிவளவன் 12-05-2020

## 8 காலக் கோடு!

உறங்கா அறிவு,
புதுப் புது உத்தியில்!
காலக் கோட்டைக்
காணும் தீவிரமாய்த்
தேடலில் நிறையும்!
நுண்ணுயிரால்;
மண்ணில்,
வீழும் மாந்தர்!
அறிவைச் செய்யும்;
ஆற்றலில் குழப்பம்!
ஆளுமை நிகழ்த்தும்,
காலக் கோடு!
அறிவைத் திண்ணும்,
அதுவும் நுண்ணுயிரே!
**-கவிவளவன்.**
09-05-2020



22. நிந்தை செய்வோரை
 நினைவினில் அகற்றிடுவோம்!
சிந்தை செம்மையாகி
 செயல்களும் சிறப்பாகும்!!
வந்தனை செய்வோம்
 மகிழ்ச்சிக்கு நானிலத்தில்!!
இந்தநாள் இனியநாள்!
 இறைவனின் அருளால்!
அந்தமில் மகிழ்வும்
 ஆனந்த நிலையும் ஆகிட,
சிந்தை இறுக்கும் **கொரோனா**வும்
 செத்துதான் மடியுமே!
 26-05-2021

## 14. சிந்திப்பாய் மனிதனே!

காய்ந்தது மீன் என்றால் அது கருவாடு ஆகும்!
சாய்ந்தது மரமெனில் அது விறகாயும் ஆகும்!
ஓய்ந்தது மூச்செனில் உன்னுடல் எதற்காகும்?

சாய்ந்திடும் காலத்தின் சரிவுகள் அறியாமல்;
பாய்ந்திடும் இன்பமே நாளும் என்றெண்ணி,
ஆய்ந்திடும் நல்லறிவை ஒதுக்கியே வைத்து;

ஓய்ந்திடப் பொழுதின்றி ஓடிடும் மாமனிதா!
தீய்த்திடும் நோயாம் நுண்ணுயிர்க் **கொரோனா,**
மாய்ந்திடும் மாந்தர் உறும்நிலை அறியாருண்டோ?

போய்விடும் இன்பங்கள் பொறாமைச் சேர்க்காதே!
ஆய்வென வாழ்வின் அடிகளில் தேடாதே பொருளை!
ஓய்ந்தபின்பு உலகில் எதைதான் நீயும் தேடுவாயோ!

சாய்ந்திடும் பொழுதாய், நகர்ந்திடும் நாட்களை நோக்கு!
தேய்ந்திடும் மனத்தில் தெளிவாய் இயன்நிலைத் தேடு!
பாய்ந்திடும் இன்பமே! புரிந்திடும் இறையெனும் புதிரே!

**கவிவளவன்** (09-08-2020) 12.10 AM

## 15. இறைவா!

இயன்நிலை திரும்ப வேண்டும்!
 யாவரும் மகிழ்தல் வேண்டும்!
துயரெலாம் போதும்; வாழ்வில்
 துன்பத்தை அகற்று இறையே!
பயமிலா நிலையே வேண்டும்!
 பார்வையில் தெளிவு வேண்டும்!
கயல்போல் துள்ளல் வேண்டும்!
 களமின்றி மகிழ்தல் வேண்டும்!


இடையிலா துயரும் நீங்க,
 இணையிலா இன்பம் பொங்க,
தடையிலா மனத்தில் நிறைந்து;
 தன்மையாய்ச் சிறந்து வாழ்வோம்!
விடையென அவரவர் இறையை,
 விருப்புற்று வேண்டி நிற்போம்!
மடைதிறந்த வெள்ளம் போலே '
 மகிழ்வுடன் வாழ்வோம் இனியே!
- கவிவளவன் (13-08-2020 6.25 AM)

## 12. எழுக மனமே!

# முன்னோர் வழியெல்லாம்,
பின்னொக்கித் தள்ளி விட்டோம்;
விஞ்ஞான அறிவென்றே!

# துன்பமாய்த் தொடர்ந்து வரும்;
கொரோனாவைக் கொன்றொழித்தால்,
இறப்பை நாம்;
இடரின்றி களைவோமோ மண்ணில்!


# என்புதோல் உடம்பும்
இல்லாதாகும்;
இயன்நிலை தானே வாழ்வு!




# பொன்மனம் பூண்டு,
இயல்பாய் வாழ்வோம்!
வீண்பயம் எதற்கு?

# தூய்மை கொள்வோம்!
தொற்றைத் தவிர்ப்போம்!
முன்னோர் வழியில்,
மீண்டும் முகிழ்ந்து எழுவோம்!

# வீட்டு வாயிலில்,
வேப்பமரம் வளர்ப்போம்!
கைகால் கழுவி,
இல்லத்துள் நுழைவோம்!



# மாண்டவர் துக்கத்தை,
மனத்திலும் நீக்க,
குளித்துக் களைவோம்,
உடலின் தூய்மையால்!



# மஞ்சள், மிளகுடன்,
மருவிலாச் சீரகம்;
சேர்த்தே யுண்போம்!

# பண்டைய முறைகளைப்
பகுத்தே அறிந்து,
மீண்டும் கொணர்வோம்!

# துளசி மாடத்தில்,
தூய்மைக் காற்றும்,
வேம்பின் காற்று,
கிருமியை அழிக்க,
மஞ்சளும் மிளகும்;
உடலைப் பேணும்!

# எண்ணெய் தேய்த்து,
நன்னீராடுங்கள்!
உடலின் சூடும் சளியும்,
இயன்நிலை காணும்!
இயற்கை வழியே,
இனிமை கூட்டும்!

# மண்வளம் காக்க,
மரங்களை வளருங்கள்!
பெண்மையின் அன்பில்,
உலகம் உய்யும்!

# யாவும் இயலென்று,
புரிந்து கொள்ளுங்கள்!
இல்லையேல்,
இறையென்று,
மனத்தைத் தேற்றுங்கள்!

# துன்பம் விலகும்!
தோல்வியும் மறையும்!
உன்னதமாக,
உள்ளம் மிளிரும்!

**கவிவளவன்!** 29-07-2020 (08.05 AM)

## 15. கொரோனாக் கவிதை!

எங்கும் நிறைந்ததாய்; யாவரின் எண்ணமும்,
தங்குத் தடையின்றி பூச்சிக் **கொரோனா**
தங்கி நிறைதலால், வல்லோன் இறையோடு,
மங்காப் புகழ்பெறக் காண்!

-**கவிவளவன்** 02-07-2020 (10-45 AM)

## கொரோனா பரவலைத் தவிர்ப்போம்!

சமூக விலகலை ஏற்க மறுத்தால்,
சமூகப் பரவல் தவிர்த்தல் அரிது!
கொரோனா பரவாமல் வாழ்வதற்கு நாமோ,
விலகிநிற்க வேண்டும் உணர்.

**மதுரை பாபாராஜ்**

## 14. மனந்தேறி வாழுங்கள் !

மனமே அறிவு அறிவே திறன்!
மனமே மகிழ்ச்சி!
மகிழ்ச்சியே மனநலம்!
மனநலமே உடல்நலம்!
உடல்நலம் உன்னத வாழ்வு!
மனம் கனவுகளின் கூடு!
சிதையாக் கனவைச் சிந்தையில் நிறுத்தி,
அழியா மனத்தில் ஆற்றல் மிகுந்திட,
**கொரோனா** தன்னை;
முற்றிலும் மறந்திட, மனமே தேறும்!
இறப்பு என்பதும், இயன்நிலை தானே!
மனந்தேறி வாழுங்கள் மகிழ்வுடன் நாளும்!

— **கவிவளவன்!** ( 10-07-2020)

## 13. காலக்கோடு!

# ஓ இறைவனே,
நீ உண்மையானால்,
எனக்கு,
கால இயந்திரத்தைக் காட்டிக் கொடு!

காலத்தின் பின்னோக்கி,
யான் நகர வேண்டும்!
குழந்தையாய் நின்று,
குதூகலிக்க வேண்டும்!

எனக்குள்,
**சில பல பிரச்சினைகள்!**
சொல்ல முடியா துயரங்கள்,

# பள்ளியில்லாமல்,
ஏன் கற்க வேண்டும்!
இறைவா!
கொரோனா கிருமியை,
நீ படைத்தாய்!
தாக்குவோரைத் தாக்கு!

# என்போன்ற இளங்குருத்துக்களை,
ஏன் வதைக்கிறாய்!
ஓடியாடி விளையாடவில்லை!
வீட்டுள் முடங்கி,
தொல்லைக் காட்சியாயினும்,
தொலைக் காட்சியே துணை!

# அன்று,
இரண்டு விளையாட்டுக்கு,
கை தராதக் கைபேசி,
இன்று,
என் கையில் பாடத்தோடு!

# நண்பரைக் காணாமல்,
சிரித்து மகிழாமல்,
ஐயகோ!

# இறைவா,
கால இயந்திரத்தைக் கொடு,
கொரோனா இல்லாத காலத்தில்,
சிறு பிள்ளையாய்ச்
சிரித்து மகிழ்கிறேன்!

# உன் ஆட்டம் முடிந்ததும் சொல்,
மீண்டும் வருகிறேன்!
பள்ளியில் பயில!
- கவிவளவன் (02-08-2020) 8.45.AM)
(This is written as mind voice of Master Tarun Krishna, S/o V.J. Gopikrishnan)

## 11 .கொரோனாவே ஒழி!

மானுட மனங்களிலே மங்காதப் பேரிடராய்த்,
தானென நுழைந்திட்ட நுண்ணுயிரே கொரோனாவே!
ஏனிந்தப் பெருங்கூத்து எதுதான் உன்கலனோ?
வானுக்குக்கீழேப் பல்லுயிர்கள் வளமாய் வாழ்கையிலே,

மானுடரைமட்டும் தாக்குமுந்தன் செயலேனோ?
தானாய்ப் பலசெய்து இயற்கைக்கு எதிரானான்;
ஆனாலும், இன்றுமதனை நினைப்பார் இல்லையென்பாய்!
வீணாய் யாவரையும் ஏனோநீ தாக்குகின்றாய்?

தானாய்ப் பிறந்தாரோ வறுமையில் உழல்பவர்தாம்?
மேனாள் பெருமை கொள்ளும் மதியகத்தார்,
வானாளப் பொருள் சேர்க்கும் கள்ள மனமுடையோர்,
கோனாய் நிறைகின்ற சிறுமதி கொண்ட அரசியலார்,

ஆனப் பலரையும் அடுத்து நன்றாய் வாழவிட்டு,
தன்னிலை அறியாச் சிறுவரும் முதியவரும்,
மாண்டார் உன்தாக்கம் உட்கலந்து என்கின்றார்!
காண முடியா நுண்ணுயிரே உனைப் படைத்த யெங்கள்,

ஆனப் பரம்பொருள் சத்தியவான் அவனேயாவும்,
ஆனாலும் உன்மீதோ ஐயம் அடுத்து வருகிறதே!
பெற்றாயோ நீயுமே கையூட்டு, அரசியலார் தந்தாரோ?
முற்றாத பலசெயல்கள் செய்வாரைத் தகர்த்துவிடு!

உன்நீதி சரியில்லை இங்கிருந்து நீ உடன் ஓடீவிடு!
விதியென்று வாழுகின்ற மாந்தரையே தாக்குவதேன்?
நீதியை நிலைநாட்டு நீசரை மட்டும் அழித்துவிடு!
போதிய அறிவுடனே புலன் கொண்டு செயல்படுவாய்!

கவிவளவன் - 05-07-2020 (4.35 A

## 16. நுண்கிருமி!

மனிதன்,
வீட்டுக்குள் அடங்க,
கிரீச் சிட்டன புள்ளியங்கள்!
விலங்குகள்,
முழு சுதந்தினத்துடன்,
உலாவுகின்றன
கவிவளவன் 12-05-2020



## 17. ஒளியே வாழ்வு!

கரவா ஒளியே கனிந்த வாழ்வு!
இரவாப் புகழுடன் எழுக நாளும்!
அரமாய் அறிவைச் செய்திடுக!
உரமாய் இயன்நிலை தெளிந்திடுக!

கரமாய் இணைந்து செயல்படுவோம்!
காரிருள் தனக்கும் ஒளி கொடுப்போம்!
மாறிடும் உலகியல் தெளிந்திடுவோம்!
மரணம் இயன்நிலை உணர்ந்திடுவோம்!

இரவாய்ப் பகலாய் வருவது போல்,
இன்பம் துன்பம் நிறைவது போல்,
இன்னிய வாழ்வில் **கொரோனாவும்**
இடராய் வளர்ந்து நின்றது காண்!

மடமாய் நல் அறிவைச் சிதைக்காதீர்!
விடமாய் வந்த இவ்வேதனையும்,
தடமாய் இறைவன் தானே பதித்திட்டான்!
விடாமல் அவனை வேண்டிடுவோம்!

வேதனை அகன்றிட மனம் கொள்வோம்!
நாதமாய் அவனை நினைத்திட்டால்,
நல்லவை தனையே மனம் காணும்!
அல்லவை யாவும் ஒழிந்து விட,

ஆனந்தம் வாழ்வென மனம் தெளியும்!
சினத்தால் அறிவைச் சிதைக்காதீர்!
தினம்தினம் பெருகும் இறைமாட்சி!
மனந்தனில் அறிவைச் சேர்த்திடுமே!

**கவிவளவன்** 24-07-2020 (11.45 AM)

## 18. தெளிவுகாண்!

தேவையில்லா தேவைகளைத்
தேவையென்று தினந்தோறும்,
தேடியே அலையாதீர்! மானிடர்காள்!

நாடுமோர் நுண்கிருமி நமைவிட்டு,
அகன்றுவிட இல்லத்துள் இருப்பீர்!
புகன்றசொல் நன்மையதே! நாளும்,

புலம்பியே தீர்க்காதீர்! சுத்தமும்
அலம்பும் நியதியும் முன்னோர்,
பலகாலம் பழகியே வைத்திருக்க,

வலுவான அம்மைக்கும் சீரோடு,
சிலவகை ஒழுக்கம் செய்தார்!
தெளிவாக அதற்கு தெய்வம்தனை,

வளமாக செய்தவனே தமிழன்!
அளவோடு நகருங்கள் பிணியற்று,
ஆனந்தமாய் இனிமேல் வாழத்தானே!

**கவிவளவன்** 15-05-2021 (11.15AM)

## 19. தெளிக மனமே!

மனத்தை தெளிவாய் வைத்திங்கள்!
தினமும் சுத்தம் காத்திடுங்கள்!
நலமாய் நாமும் வாழ்ந்திடலாம்!
தளமாய் மனத்தை திருத்துங்கள்!
இயற்கை பேரிடர் என்பதுபோல்,
கிருமிதனையும் நினைத்திடுங்கள்!
ஊடகச் செய்தி அச்சுறுத்தும்!
ஒவ்வா நிலையாய் விலக்குங்கள்!
மனமே வாழ்வின் நிலைக்களனாம்!
மகிழ்ச்சியை அங்கே சேர்த்திருக்க,
மனத்தால் மனத்தை ஆளுங்கள்!
இந்தநாள் இனியநாள்! வல்லவன்
இறைவன் அருளால் வாழ்வோம் நிறைந்து!
19-05-2021 (7.55 AM)

## 20. சுத்தம்தனைக் கைக் கொள்வோம்!

சுற்றமும் நட்பும் சுகமாய் வாழ,
சுத்தம் அதனைக் கைக் கொள்வோம்!

மற்றவர் நலத்தை மனதிலேற்ற
நாமும்தானே சுகமாயிருப்போம்!

பற்றில்லா பற்றுடனே
பக்குவமாய் வாழ்ந்திருப்போம்!
இந்தநாள் இனியநாள்!

வல்லவன் இறைவன் அருளால்
வாழ்வோம் நிறைந்து!
15-05-2021

**21.** உள்ளமும் உணர்வும் தெள்ளத் தெளிவாதல்,
நோயின் தொற்றை இல்லா தாக்கும்!
கிள்ளை மனமாய் சிந்தையை நிறுத்தி,
கட்டுப் பாட்டை செயலில் நிகழ்த்தி,
பள்ளம் மேட்டைப் பார்த்து நடப்பதாய்,
நினைவைச் சுமந்து வாழும் நிலையிலும்,
வள்ளல் இறைவன் வழியில் தடுப்பு
ஊசியும் தரித்து கொண்டு,வாழ்வோம் நிறைந்து!
இந்தநாள் இனியநாள் (13-05-2021)

# 23.பொழுதினி இனிதாகும்!

கவிந்தநல் இரவின் கோலம்,
கழன்றதாம் பொழுதைச் சொல்லும்!
புவியிதன் சுழற்சி ஆக்கும்
பொழுதெனும் காலச் சூழல்!
தவித்தவாய் தண்ணீர் போலே,
தாக்கும் உறக்கம் தானே!
சிவிகையாய் உடலைப் பேணும்
உயிரதும் நிலையை மறக்கும்!

காலையே பிறந்த தென்று
களிப்புடன் எழுவோம் நாளும்!
மலையதால் சூழல் தோன்றும்
மறுபடி பொழுதும் கழியும்!
கலையாத காட்சிக் கோலம்,
கனமான மனத்தின் தேடல்!
அலைபோலே நம்மை நாளும்
அழைத்து தான் ஓட வைக்கும்!

விடையேதும் தேடா நிலையாய்
வெறுமையாய் செல்லும் நாட்கள்
படை கொண்டு வந்தாற் போலே
பரிதாபச் சூழல் இன்று!
தடையற்ற காலச் சூழல்
தடுமாற வைக்கும் கோரோனா
மடைசெல்லும் வெள்ளம் போலே
மனத்திலே அமைதி காண்போம்!

*கவிவளவன்*

27-05-2021 (11.05 AM)